கிட்ட வந்து, அவனைப் பராமரித்தான். (லூக்.10:34)

# பராமரிப்பு

(Paraamarippu)

மாத இதழ்

ஆசிரியர் : Pr. P. ரூபன் தனசிங்

# தேவபெலன் பூரணமாய் விளங்கும்.

Website :
www.goodsamaritanfellowshipofindia.com
www.houseofpraise.in

Vol. 10 ஆண்டு சந்தா ரூ 100/- Issue 3

## ஆசிரியரிடமிருந்து......

எனக்குப் பிரியமான தேவப்பிள்ளையே!



தேவகிருபை நம்மை சென்ற மாதங்களிலெல்லாம் ஆசீர்வாதமாக நடத்தி வந்து இந்த மார்ச் மாதத்திற்குள் கொண்டு வந்திருக்கிறது. தேவனுக்கு நன்றியுடையவர்களாய் இருப்போமாக.

சென்ற மாதத்தில் இலங்கை போதகர் பிரையன் ஸ்டீவன்சன் அதிசயராஜ் அவர்கள் நம்மிடத்தில் தங்கி நாகர்கோவில் துதியின் வீடு மற்றும் சுற்றிலும் உள்ள பல சபைகளிலும் செய்த ஊழியங்கள் மிகுந்த ஆசீர்வாதமாய் இருந்தது. அவர்களை தேவன் இன்னும் அதிகமாய் பயன்படுத்த அவருக்காய் ஜெபியுங்கள்.

சென்ற மாதம் கோமதிமுத்துபுரம் ஊழியம் மிக சிறப்பாக நடந்தேறியது. போதகர் வெல்பிரைட் அவர்களின் செய்தி மக்களை ஆசீர்வதித்தது. பிள்ளைகள் அதிகமாய்த் தொடப்பட்டார்கள். தேவனுக்கே மகிமை! இந்த மாத விசேஷித்த செய்தியை கவனமாக வாசித்து ஆசீர்வதிக்கப் படுங்கள்.

உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

தேவப்பணியில்

உங்கள் போதகர்.

சிறப்பு செய்தி



# சத்தத்தைக் கேட்பார்

போதகர். **பா. ரூபன் தனசிங்**

கர்த்தாவே நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு, எனக்கு இரங்கி எனக்கு உத்தரவு அருளிச் செய்யும் (சங்.27:7)

மனிதர்களில் சிலர் நாம் அவர்களைக் கூப்பிடும் போது, நமது கஷ்டமான நிலைமையை தெரிந்து வைத்திருந்தாலும், நமக்கு செவி சாய்ப்பதில்லை. கேட்டும் கேளாதவர்கள் போல இருப்பார்கள். இதனை நீங்கள் உங்கள் சொந்த அனுபவத்தில் கூட கண்டு அனுபவித்து வேதனைப்பட்டிருப்பீர் கள். மனிதனின் செயல் நம்மை கஷ்டப்படுத்தும் ஆகவே தான் வேதம் சொல்கிறது, மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். (சங்.118:8)

ஆனால் நமது தேவனோ, அப்படி நமது ஆபத்தில் நாம் அவரை அழைக்கும் போது, கேளாதவர் போல் நடிக்காமல், நமது கூப்பிடுதலுக்கு செவி கொடுப்பார், நிச்சயமாக! அவரே நம்மைப் பார்த்து வாக்கு பண்ணுகிறார் ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன்; நீ என்னை மகிமைப்படுத்துவாய் (சங்.50:15) அதற்கு அத்தாட்சியாக சங்கீதக்காரன் சொல்கிறான்; இந்த ஏழை கூப்பிட்டான். கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக் கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார். (சங்.34:6) ஆகவே நமக்கு தைரியம் உண்டாயிருக் கிறது. நாமும் கூப்பிடலாம். அவர் கேட்பார்.

### பார்வையற்றவனின் கூப்பிடுதல்

பின்பு அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று

விசாரித்தான். நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன்; இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான். முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும் படி அவனை அதட்டினார்கள். அவனோ தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று, அவனைத் தம்மிடத்தில் கொண்டு வரும் படி சொன்னார். அவன் கிட்ட வந்த போது அவர் அவனை நோக்கி நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன்; ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து, தேவனை மகிமைப்படுத்திக் கொண்டே, அவருக்குப் பின் சென்றான். ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு தேவனைப் புகழ்ந்தார்கள். (லூக்.18:35-43)

## அதட்டுகிறவர்கள் மத்தியில் அரவணைக்கிறவர் இயேசு

பாருங்கள் பார்வையற்ற இவன் ஆண்டவராகிய இயேசுவைக் கூப்பிட்ட போது இயேசுவோடு முன்னால் நடந்து போன சிலர் அவனை அதட்டினார்கள். சத்தம் போடாதே என்று அவன் வாயை அடைக்க முற்பட்டார்கள். ஆனால் இயேசுவோ நின்று, அவனைத் தம்மிடம் அழைத்து வர ஆட்களை அனுப்பி அவனை அரவணைத்தார். எவ்வளவு அன்பான ஆண்டவர் பார்த்தீர்களா? சங்கீதக்காரன் சொல்கிறான். “கர்த்தாவே உம்மை நோக்கிக் கூப்பிட்டேன். கர்த்தரை நோக்கி கெஞ்சினேன். என் புலம்பலை ஆனந்தக் களிப்பாக மாறப் பண்ணினீர். என் மகிமை அமர்ந்திராமல் உம்மைக் கீர்த்தனம் பண்ணும்படியாக நீர் என் இரட்டைக் களைந்து போட்டு, மகிழ்ச்சியென்னும் கட்டினால் என்னை இடைகட்டினீர். என் தேவனாகிய கர்த்தாவே, உம்மை என்றென்றைக்கும் துதிப்பேன் (சங்.30:10-12) ஆம்! அருமையானவர்களே! அவர் நம்மை அரவணைப்பார். நமக்கு உதவுவார். இயேசு சொன்னார். ஆகையால்,

பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும் போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையான வைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத்.7:11)

அப்படியானால் அவரை நாம் கூப்பிடும் போது, கேட்டு நமக்கு கண்டிப்பாக விடுதலையும், நன்மையானவைகளும் தருவார் அல்லவா?

### கூப்பிடுவதே விசுவாசம்

இயேசு தம்மைக் கூப்பிட்டு, தம்மிடத்தில் அழைத்து வரப்பட்ட பார்வையில்லாதவனைப் பார்த்து உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்று சொன்னார். விசுவாசத்தின் படிகளைப் பாருங்கள்.

1. கூப்பிட்டான்
2. இயேசுவிடம் வந்தான்.
3. பார்வை வேண்டும்


என்று கேட்டான்.

இந்த மூன்று செயல்களிலுமே விசுவாசம் அடங்கியிருக்கிறது! எனவே தான் இயேசு அவனைப் பாராட்டினார். தான் அற்புதம் செய்தாலும், தன்னுடைய ஊழியத் தைப் பாராட்டாமல், அவனது விசுவாசத்தைப் பாராட்டினார். அப்படிச் செய்ததினாலே தம்மை சூழ்ந்திருப்பவர்களையும் ஆண்டவரை விசுவாசிக்கத் தூண்டினார்!

### அவனுக்குச் செய்தவர் நமக்கும் செய்வார்.

உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும், வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார். அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அலல. பரிதானம் வாங்குகிறவரும் அல்ல (உபா.10:17) தேவனிடத்தில் பட்சபாதமில்லை (ரோ.2:11) அல்லேலூயா! ஆகவே நாம் கூப்பிட்டால் தேவன் நமக்கும், செவிகொடுத்து, நமக்கு அற்புதம் செய்து ஆசீர்வதிப்பார். நாமும் அவரைக் கூப்பிடுவோம். அவரிடத்தில் வருவோம். அவரிடம் சொல்வோம். அவர் உதவி செய்வார்.

ஆமென்!





# வேதவினாப்போட்டி (யோபு)

1. ஒரு நிமிஷம் மாத்திரம் நிற்கும் அது எது?
2. பாவிகளை பட்சிக்கும் அது எது?
3. என் ஆவி பிரியுமட்டும் என் உத்தமத்தை என்னை விட்டு விலகேன் என்றது யார்?
4. ஒளியும் இருளாகும் தேசமெது?
5. ஒவ்வொரு ஆடு ரூ.200/- ஒட்டகம் ரூ.1000/- ஏர்மாடு ரூ.1000/- கழுதை ரூ.200/- இந்தக் கணக்கின்படி யோபு பக்தனுக்கிருந்த மிருக ஜீவன்களின் விலைக்கிரயம் என்ன? மிருக ஜீவன்கள் எத்தனை? பின்னலுண்டான ஆசீர்வாதத்தின் கணக்கு என்ன?
6. முதியோர்களிடத்தில் ......................... இருக்கும்?
7. குருடனுக்குக் கண்ணாயிருந்தவர் யார்?
8. லிவியாதான் தும்முகையில் .................... வீசும்
9. பிகெமோத் என்பது என்ன?
10. இதோ, நான் நீசன் யார் யாரிடம் கூறியது?

**20ம் தேதிக்குள் பதில்கள் வந்து சேர வேண்டிய முகவரி**

போதகர். **எபனேசர் சாம் பால்,** (பராமரிப்பு)

41/18, அசம்புரோடு, வடசேரி, நாகர்கோவில் - 1

கைப்பேசி: 7373585803

நீங்கள் உங்கள் full size போட்டோவை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் பிறந்த நாள் தேதியையும் மற்றும் முகவரியையும் அனுப்பி வையுங்கள் உங்கள் பிறந்தநாள் அன்று பரிசை அனுப்புவோம். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

போதகர். **எபனேசர் சாம் பால்,**

41,18 அசம்பு ரோடு, CBH எதிர்புறம் சக்திகாடன்,

வடசேரி, நாகர்கோவில் - 629 001.



சிறுவர் பகுதி

# காகமும் அன்னமும்

பிறருடைய குறைகளை நாம் சுட்டிக்காட்டும் போது நம்முடைய குறைகளை உலகம் அறிய ஆரம்பிக்கிறது. ஹலோ குட்டீஸ், நம்ம எல்லாரும் காக்கா ரொம்ப பிடிக்கம். ஒரு சுட்டிக் காக்கா எப்படி கெட்டி காக்கா ஆச்சு ன்னு ஒரு குட்டி கதை பார்ப்போம்.

அழகிய கடற்கரை பகுதியில் நிறைய பறவையினங்கள் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தன. அங்கு ஒரு குட்டி காகம் எல்லோரிடமும் கர்வமாய் நடந்துக்கொள்ளும் கேலி செய்யும். அந்த காகம் அது தன்னை மிக பெரிய அறிவாளி எனக்கு தான் மற்றவர்களை விட அனைத்தும் தெரியும் என்ற ஆணவத்தில் திரிந்தது. அங்கு இருக்கும் மற்ற பறவைகளை வம்புக்கு இழுத்து போட்டி போட்டு தன்னை சிறந்தவனாக காட்டி கொண்டு மிதப்பில் அலைந்தது. அந்த காகம் ஒருநாள் கடற்கரை ஓரமாக சென்று கொண்டிருந்தது. அப்போது ஒரு அன்னப்பறவையை கண்டது. அதன் அருகில் சென்று, அண்ணா நீங்க ரொம்ப அழகாக இருக்கீங்க. ஆனா, பாவம் உங்களால் என்னைப் போல பறக்க முடியாதுல என கேலி செய்தது.

தம்பி நான் இங்கே சிறிது நேரம் ஓய்வெடுக்க வந்திருக்கிறேன். உன்னோடே வாக்கு வாதம் பண்ண வரல. போய்விடு என்றது அன்னப்பறவை. அதற்கு காகம் சிரித்தவாறு “என்னோட போட்டி போட்டு தான் பாருங்களேன்” என்றது.

அன்னப்பறவை சரி என்றது சற்று கோபமாக. காகம் சொன்னது. நாம் இருவரும் கடற்கரையில் சில மைல்கள் பறந்து செல்வோம். யார் முதலில் செல்கிறார்களோ, அவர்கள் சிறந்தவர்கள் என்றது, அன்னப்பறவை தலையாட்டி சம்மதம் சொன்னது. இந்த போட்டியை மற்ற பறவைகளும் மிக ஆர்வமாக பார்க்க தயாராகின இருவரும் பறக்க ஆயத்தமானார்கள். காகம் தான் குண்டாக இருப்பதை மறந்து முதலில் வேமாக பறந்தது. அன்னமோ அதன் போக்கில் நிதானமாக பறந்தது. சிறிது தூரத்தில் காகத்திற்கு மயக்கம் வருவதுப் போல் திணறியது. அதை கவனித்த அன்னபறவை காகத்திடம் என்ன தம்பி

என்னாச்சு என்றது. அதற்கு காகம் என்னால் முடியவில்லை அண்ணா, தலை சுற்றுகிறது. கடலில் விழுந்து விடுவேன் என்று பயமாக உள்ளது என்றது. இரக்கப்பட்ட அன்னப்பறவை சரி என் முதுகில் உட்காரு நான் கரையில் விடுகிறேன் என்றது. இருவரும் கரைக்கு வந்தன. அப்பாடா பிழைச்சேன். நன்றி அண்ணா என்றது குட்டி காகம். அன்னப்பறவை சிரித்தது. இனி யாரிடமும் இப்படி நடக்க மாட்டேன். என் தவறை உணர்ந்தேன் என வருந்தி விடைப் பெற்றது அந்த கெட்டி காகம்.

செல்வங்களே! உலகில் தன்னை விட பெரியவர்கள் இருந்து கொண்டு தான் இருப்பார்கள். அதற்காக மற்றவர்களை ஏளனம் செய்தால் ஒரு நாள் அதற்கான பலன் கிடைக்கும். அனைவரிடமும் கனிவோடு பழக வேண்டும். கர்வம் எப்போதும் கூடாது. அன்பை விதைப்போம்.





வாலிபர் பகுதி

# ஞானத்தினால் பிரியம்

போதகர்: R. E. **சாம்பால்**

ஞானத்தைச் சம்பாதி புத்தியையும் சம்பாதி. என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு. அதை விடாதே. அது உன்னைத் தற்காக்கும். அதின் மேல் பிரியமாயிரு. (நீதி.4:5,6)

ஞானியாகிய சாலொமோன் இராஜா, இளம் வயதுடையவராயிருந்த போது அவரது உள்ளம் கர்த்தரோடு இசைந்திருந்தது. தேவனுக்குப் பிரியமானதைச் செய்ய அவர் மிகவும் விரும்பினார். கர்த்தருக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டினால், கர்த்தர் அந்த ஆலயத்தில் வாசம் செய்வார் என்பதையும், அவருடைய முழு பிரியமும் தன் மேலிருக்கும் என்பதையும் அவர் அறிந்து கொண்டார். ஆகவே என் தேவனாகிய கர்த்தர் பெரியவர். நான் அவருக்குக் கட்டும் ஆலயமும் பெரிதாயிருக்கும் என்று சொல்லி கர்த்தருக்கென்று மகிமையான ஆலயத்தைக் கட்டியெழுப்பினார்.

ஆலயப் பிரதிஷ்டையின் போது ஆயிரமாயிரமான தகன பலிகளைக் கர்த்தருக்குச் செலுத்தி கர்த்தருடைய இருதயத்தை மகிழ்வித்தார். கர்த்தரும் சாலொமோன் மேல் மிகவும் பிரியமுள்ளவரானார். ஆகவே தம்முடைய மகிமையின் பிரசன்னத்தோடு பிரதிஷ்டை செய்யப்பட்ட அந்த ஆலயத்தில் வந்து இறங்கி அந்த ஆலயத்தைத் தன் மகிமையால் நிரப்பி விட்டார். அது மட்டுமல்ல “இந்த இடத்தில் ஏறெடுக்கப்படுகிற எல்லா ஜெபங்களுக்கும் என் கண்கள் திறந்ததாயும், என் செவிகள் கவனிக்கிறதாயும் இருக்கும்” என்று வாக்களித்தார்.

சாலொமோனின் இருதயம் தேவனுடைய இருதயத்தோடு இணைந்து எப்பொழுதும் தேவனை பிரியப்படுத்தினதினாலே கர்த்தர் சாலொமோனுக்கு அளவற்ற ஞானத்தைக் கொடுத்தார். புத்தியையும், விவேகத்தையும் தந்தார். இதுவரை உலகத்தில் பிறந்த ஒருவருக்கும் இல்லாத விசேஷித்த அறிவு அவருக்கு இருந்தது. கர்த்தர் தந்த அந்த விசேஷித்த ஞானத்தைக் கொண்டு அவர் நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு ஆகிய புத்தகங்களையெல்லாம் எழுதினார். கர்த்தருக்குப் பிரியமாய் நடந்து

கொள்ளுவதற்கேதுவான பல இரகசியங்களை அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். இப்பொழுது சாலொமோன் இராஜா, தன் அனுபவத்திலிருந்து எவற்றையெல்லாம் கர்த்தருக்குப் பிரியமானவைகள் என்று சொல்லுகிறார் என்பதைப் பார்ப்போம்.

1. கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது. சமுத்திரையான நிறைகல்லோ அவருக்குப் பிரியம் (நீதி.11:1) வியாபாரிகள் வியாபாரத்தில் அதிகமாக சம்பாதிக்க வேண்டுமென்ற குறிக்கோளோடு கலப்படம் செய்வதையும் கள்ளத்தராசைப் பயன்படுத்துவதையும், அநியாய விலைக்கு விற்பதையும் காணலாம். ஆனால் கர்த்தரோ, சுமத்திரையான நிறைகல்லை வைத்து உண்மையாய் வியாபாரம் செய்கிறவர்களின் மேலேயே பிரியப்படுகிறார்.

2. பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள் உண்மையாய் நடக்கிறவர்களோ அவருக்குப் பிரியம் (நீதி.12:22). “பொய்யர் அனைவரும் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளப்படுவார்கள்” என்று வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் வாசிக்கிறோம். ஆனால் உண்மையாய் வாழுகிறவர்கள் மேலோ கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

3. “துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம் (நீதி.15:8) தேவபிள்ளைகளே, உங்களை தேவ சமூகத்தில் நருங்குண்ட நொறுங்குண்ட ஜீவபலியாக அர்ப்பணித்து ஜெபிக்க முற்படுங்கள். கர்த்தர் உங்கள் மேலே பிரியமாயிருப்பார்.

நினைவிற்கு “நீதியுள்ள உதடுகள் ராஜாக்களுக்குப் பிரியம். நிதானமாய்ப் பேசுகிறவனில் ராஜாக்கள் பிரியப்படுவார்கள்” (நீதி.16:13)

**உங்கள் கவனத்திற்கு :**

**இதுவரை “பராமரிப்பு” சந்தா கொடுக்காதவர்கள் வருடத்திற்கு ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) கொடுத்து இந்த பத்திரிக்கை வெளிவருவதை தாங்குங்கள்.**

**Google Pay: 9443451115**



பெண்கள் பகுதி

# கடவுளின் பார்வையில் பெண்கள்

சில கிறிஸ்தவ பெண்கள் அலங்காரம் செய்வது அல்ல நகைகளை அணிவது தவறு என்று நம்புகிறார்கள். இது போன்ற புதிய விஷயங்களில் சில புதிய ஏற்பாட்டு வேதப் பகுதிகளை மேற்கொள்காட்டுகிறார்கள். மறுபடியும் தேவனுடைய பிள்ளைகளின் நம்பிக்கைகளை நாம் மதிக்கிறோம். ஆனால் நம்முடைய போதனை தேவனுடைய வார்த்தை உண்மையில் சொல்வதைத் தாண்டிச் செல்லாது என்பதில் உறுதியாக இருக்க விரும்புகிறோம். மனிதனால் உருவாக்கப்பட்ட யோசனைகளை தேவனிடமிருந்து வந்த கட்டளைகளாக கற்பிக்க நாங்கள் விரும்பவில்லை. (மாற்கு.7:7)

அலங்காரம் செய்வது அல்லது நகைகளை அணிவதன் உரிமையை ஆராய்வதில் 1 சாமுவேல்.167 உடன் தொடங்கு கிறோம். மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன் மனுஷன் முகத்தைப் பார்ப்பான். கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார். இந்த வசனம் நமது முன்னோக்கின் வரம்புகளைப் பற்றிய ஒரு அடிப்படைக் கொள்கையை முன் வைக்கிறது. நாம் இயல்பாகவே வெளிப்புறங்களைக் காண்கிறோம். தேவன் அதற்கு மாறாக உள்ளான உண்மையைப் பார்க்கிறார். இது வெளிப்புறங்கள் முக்கியமற்றவை என்று அர்த்தமல்ல. நிச்சயமாக நாம் காண்கிற காட்சி சமிக்ஞைகள் மூலம் மற்றவர்களுடன் உடனடியாக தொடர்பு கொள்கிறோம். மேலும் நாம் நாமாகவே தேர்ந்தெடுக்கும் தோற்றம் கிளர்ச்சி, பக்தி, கவனக்குறைவு, நுணுக்கம் போன்றவற்றை வெளிப்படுத்தலாம். ஆனால் தோற்றங்கள் ஏமாற்றும், மற்றும் உள்ளான இதயத்தின் ஆழமான பிரச்சினை, வெளிப்புற தோற்றத்திற்கு எது செய்யப்படுகிறதோ அது மனிதனுக்குப் பார்க்கப்படுகிறது. அதைப் பற்றி நாம் கவனமாக இருக்க வேண்டும். ஆனால் தேவன் இதயத்தில என்ன நடக்கிறது என்பதில் அதிக அக்கறை காட்டுகிறார்.

ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப் பெற்ற

வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கும் பவுல் கூறுகிறார். சில பெண்கள் அலங்காரம் செய்து கொள்வது அல்லது நகைகளை அணிவதைத் தவிர்ப்பதற்கு இது ஒரு பகுதியாகும்.

இந்த பகுதியில் கவனிக்க வேண்டிய இரண்டு விஷயங்கள். முதலாவதாக, ஒரு வழிபாட்டு சேவையில் ஒரு பெண்ணுக்கு சரியான உடை உள்ளது. பவுல் எந்தவிதமான குறிப்புகளையும் கொடுக்கவில்லை. ஆனால் ஒரு பெண்ணின் உடையானது அடக்கமானதாகவும் ஒழுக்கமானதாகவும் மரியாதைக்குரியதாக வும் இருக்க வேண்டும். அசாதாரணமான, அநாகரீகமான அல்லது அவமதிக்கும் எதையும் அணிவது தவறு. அடக்கமான மற்றும் அசாதாரணமானவர்களுக்கிடையில் வரிசை வரைவது அகநிலை மற்றும் அடக்கம் கலாச்சார ரீதியான விஷயங்களைப் பொறுத்தது. ஆனால் ஒவ்வொரு விசுவாசியும் பிறருக்கு குற்றமுள்ள மனசாட்சியைக் கொடுப்பதைத் தவிர்ப்பதற்கு போதுமான விவேகத்துடன் இருக்க வேண்டும்.

இரண்டாவதாக தேவனை ஆராதிக்கும் பெண்களுக்கு முறையான அலங்காரமும் முறையற்ற அலங்காரமும் உள்ளது. ஒரு தெய்வீக பெண்ணுக்கு சரியான அலங்காரமானது வெறுமனே நல்ல செயல்கள் ஆகும். தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள் அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள். அவள் எப்போதும் நல்லது செய்து ஏழைகளுக்கு உதவுவதன் மூலம் தன்னை அழகாக அலங்கரித்தாள். (அப்போஸ்தலர்.9:36). ஒரு தெய்வீகப் பெண்ணுக்கு முறையற்ற அலங்காரமானது. அவளை பெருமையுடன் இருக்கத் தூண்டுகிறது அல்லது அவளுடைய வெளிப்புற தோற்றத்திற்கு கவனமாக ஈர்க்கிறது. எடுத்துக்காட்டுகள் விரிவான சிகை அலங்காரங்கள், தங்கம் மற்றும முத்துக்கள் மற்றும் விலையுயர்ந்த ஆடைகள். ஒரு வழிபாட்டு சேவையில் கவனம் முழுவதும் தேவனாக இருக்க வேண்டும். சமீபத்திய ஃபேஷன், மிகப்பெரிய வைரம் அல்லது மிகவும புதுப்பாணியான தலை பிண்ணல் அல்ல. திருச்சபைக்கு 3,000 டாலர்கள் மதிப்புள்ள ஆடை அணிவது அல்லது அழகிய நகைகளை ஒளிரச் செய்வது தேவனுடைய பெண்ணை உண்மையிலேயே அலங்கரிக்க எதுவும்

செய்யாது. அவள் ஆடையை விற்று பணத்தை ஒரு கிறிஸ்தவ தொண்டு நிறுவனத்திற்குக் கொடுத்தால், அவள் ஒருவருக்கு சேவை செய்வதில் சிறப்பாக செலவிடப்பட்டிருக்கலாம்.

1 தீமோத்தேயு.2:9-10-ல் தேவனைப் பிரியப்படுத்த முயற்சிப்பதற்கும், மனிதர்களைப் பிரியப்படுத்த முயற்சிப்பதற்கும் இடையில் பவுல் ஒரு வித்தியாசத்தை குறிப்பிடுகிறார். பொது வழிபாட்டு சேவை பேஷன் ஷோவாக இருக்கக் கூடாது. ஒரு பெண் ஒரு போதும் நகைகளை அணியவோ அல்லது தலைமுடியை வித்தியாசமாக தோற்றமளிக்க செய்யவோ முடியாது என்பதல்ல. திருச்சபையில் அதிகப்படியான அலங்காரம் மற்றும் அதிகப்படியான நகைகளை அணிவது முறையற்றதாகும். நாம் அனைவரும் பெருமைக்கு எதிராகக் காத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களை அல்லது நம்மை உண்மையிலேயே முக்கியமானவற்றிலிருந்து திசைதிருப்பக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தேவனை வணங்குதல் மற்றும் பிறருக்கு சேவை செய்தல்.

அலங்காரம் மற்றும் நகை அணிதலுக்கு எதிராக மேற்கோள் காட்டப்படும் ஒரு வேதப்பகுதி 1பேதுரு.3:3-5 மயிரைப் பின்னி பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது. ஒரு பெண்ணின் வெளிப்புற விரைவான அழகுக்கும், உள்ளார்ந்த, நீடித்த அழகுக்கும் உள்ள வேறுபாட்டை பேதுரு வலியுறுத்துகிறார். உண்மையிலேயே அழகான பெண்ணுக்கு “மென்மையான மற்றும் அமைதியான ஆவி” இருக்கிறது இந்த உலகில் அவள் அதிகம் கவனிக்கப்படாமல் இருக்கலாம், ஆனால் தேவன் இருதயத்தைப் பார்க்கிறார். சுயநல வணக்கத்திற்காக ஒருவரின் அழகைக் காட்டுவது கிறிஸ்துவின் மனத்தாழ்மையுடன் ஒத்துப்போவதில்லை. குறிப்பாக ஒரு வழிபாட்டு சேவையில் கொந்தளிப்பு நிகழும் போது அவ்வாறாக ஒத்துப் போவதில்லை. மீண்டும், சடை முடி பாவமானது அல்ல, ஆனால் அவர்களின் தலைமுடி, நகைகள் அல்லது ஆடைகளை அழகாக மாற்றுவோரை நம்பியிருப்பவர்கள் மாயையைத் துரத்துகிறார்கள். அதற்கு மாறாக, தெய்வீக

தன்மையை வளர்ப்பது நல்லது. சுருக்கமாக ஒரு சாதாரணமான முறையில் செய்யப்படும் வரை நகைகள், அலங்காரம் அல்லது சடை முடி அணிவதில் இயல்பாகவே தவறில்லை. மேலும், இது போன்ற விஷயங்கள் ஒரு போதும் நல்ல செயல்களையோ, தாழ்மையான மனநிலையையோ மாற்ற முடியாது. ஒரு கிறிஸ்தவ பெண் தன் வெளிப்புற தோற்றத்தில் அவ்வளவு கவனம் செலுத்தக்கூடாது. அவள் ஆவிக்குரிய வாழ்க்கையை புறக்கணிக்கிறாள். ஒரு வழிபாட்டு சேவை நம்மீது அல்ல, தேவனை மையமாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு பெண் தனது தோற்றத்திற்காக அதிக நேரத்தையும் பணத்தையும் செலவிடுகிறாள் என்றால் பிரச்சனை என்னவென்றால், பெண்ணின் முன்னுரிமைகள் தவறாக வைக்கப்பட்டுள்ளன. விலையுயர்ந்த நகைகள் மற்றும் உடைகள் பிரச்சினையின் முடிவுகளே ஆகும்.

---



## வாழ்த்துக்கள்!



**இம்மாதம் பிறந்தநாள்**
**மற்றும் திருமணநாள் காணும்**
**அன்பர்களுக்கு பராமரிப்பு குழுவின்**
**நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.**

**"தேவரீருடைய ஆசீர்வாதம்**
**உம்முடைய ஜனத்தின்**
**மேல் இருப்பதாக" (சங்.3:8)**

**காணிக்கை அனுப்ப விரும்பினால் :**




**G-Pay : 94434 51115**
(or)
P. Ruban Thanasingh
A/C : 1112101023345
Canara Bank, Meenakshipuram.
IFSC : CNRB0001112




தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**மாவட்டச் செய்திகள்:**

- ✻ வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதாரை இணைக்க 2 மாதம் காலக்கெடு குமரி மாவட்ட கலெக்டர் ஸ்ரீதர் தகவல்
- ✻ தக்கலை அருகே பள்ளி கட்டிட சிலாப்-ல் 2 நாட்களாக உணவு, தண்ணீரின்றி பரிதவித்த நாய், தீயணைப்புத் துறையினர் மீட்டனர்.

**தமிழகம்**

- ✻ டெல்லி நேரு பல்கலைக்கழகத்தில் தமிழக மாணவர்கள் மீது தாக்குதல். முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் கடும் கண்டனம். நடவடிக்கை எடுக்க துணைவேந்தருக்கு வலியுறுத்தல்.
- ✻ திருச்சியில் பட்டப்பகலில் பரப்பரப்பு. போலீசாரை கத்தியால் குத்திவிட்டு தப்பி ஓடிய 2 ரவுடிகள் மீது துப்பாக்கி சூடு. இன்ஸ்பெக்டர் உள்பட 3 போலீசார் காயம்.

**இந்தியா**

- ✻ மேகாலயாவில் பிரதமர் மோடி பங்கேற்க இருந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்துக்கு மேகாலயா அரசு அனுமதி மறுப்பு.
- ✻ புதிய கல்விக் கொள்கை இளைஞர்களை புதிய நூற்றாண்டுக்கு தயார்படுத்தும் பிரதமர் மோடி பெருமிதம்.

**உலகம்**

- ✻ ஓர் ஆண்டை நெருங்கும் போர். உக்ரைனுக்கு ஜோ பைடன் திடீர் பயணம். ரூ. 4 ஆயிரம் கோடி ராணுவ உதவிகளை அறிவித்தார்.
- ✻ பஞ்சாப் எல்லையில் சீனாவின் டிரோன் சிக்கியது. 24 மணி நேர இடைவெளியில் மீட்கப்பட்ட இரண்டாவது டிரோன் இதுவாகும்.

**விளையாட்டு**

- ✻ துபாயில் தொடங்கியுள்ள துபாய் சர்வதேச டென்னிஸ் சாம்பியன்ஷிப்பில் இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா, அமெரிக்காவின் மேடிசன் கீசுடன் இணைந்து பங்கேற்கிறார்.
- ✻ உலக, ஆசிய ஜீனியர் தடகள போட்டிக்கான இந்திய வாள்வீச்சு, அணியில் தமிழக வீரர், வீராங்கனைகள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

Registered News Paper
Regd. No.TNTAM/2012/42148
Postal Reg. No. KKI/117/2022-2024
Posted at Nagercoil Head Post Office
Date of Posting 29th & 30th of Every Month Date of Publication : 27st of every month

# உபவாச கூட்டம்

**இடம் :** B.S.M. நம்பிக்கை மையம், கோமதிமுத்துபுரம்.
**நாள் :** 2023 மார்ச் 18 (சனிக்கிழமை)
**நேரம் :** காலை 10.00 – 2.00 மணி வரை

செய்தி:

## போதகர் பா. ரூபன் தனசிங்



தொடர்பு:
போதகர் சாம் E. பால்
செல்: 7373585803

*அனுமதி இலவசம்!*

Owned & Publised by P. Ruban Thanasingh From : 41/18, Asambu Road, Vadasery, Nagercoil-629 001. K.K. Dist., Tamil Nadu, and Printed by S. Jesu Rajan, at Benzen Printers,12, Gnanai Street, W.C.C. Road, Nagercoil-629 001. Editor P. Ruban Thanasingh

To ..............................................................

..............................................................

..............................................................

..............................................................

If undelivered please return to :
Pr. P. Ruban Thanasingh
**"PARAAMARIPPU"**
41/18, Asambu Road, Vadasery,
Nagercoil, Tamil Nadu,
South India - 629 001.

Contact :
**94434 51115**
**73735 85803**



Benzen Printers, Ngl. Cell : 9442470190